# நான் வல்வெட்டித்துறையில் பிறந்தவன்!..

"தமிழ்நீ".பொன்.சிவகுமாரன்

1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் "சேகுவெரா"கிளர்ச்சி என்ற பெயரில் முழுஇலங்கையுமே ஸ்தம்பிதமடைந்து காணப்.பட்டது. ஊரடங்குச்சட்டங்கள் ஒருபுறமும் அங்குமிங்குமாக ஏற்ப்படுத்தப்பட்ட வீதித்தடைகள் மறுபுறமும் மக்களின் நடமாட்டத்தை கேள்விக்குறியாக்கி இருந்தன. வீடுகளில் முடங்கிக்கொண்ட மக்கள் வானொலிச் செய்திகளையும் வதந்திகளையும் தம்முள் அசைபோட்டவாறு அசைவற்று இருந்தனர். தலைநகராம் கொழும்பில் ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்தில் இருந்து பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவை கடத்தும் ஜே.வி.பி இனரின் முயற்சி தோல்வியடைந்ததால் கொழும்பிலும் பலத்த சோதனைகளும் கெடுபிடிகளும் என நாடே அல்லோகல்லப்பட்டது.

ஏன் 1971 ஏப்ரல் 5 முதல் 22 ந்திகதி வரையான காலப்பகுதியில் கேகாலை, குருநாகல், மாத்தறை, எல்பிட்டியா போன்ற பலபகுதிகளில் அரசாங்கநிர்வாகம் செயலிழந்து காணப்பட்டது. பலபிரதேசங்கள் ஜே.வி.பி யினரின் கட்டுப்பாட்டில் இருந்தன. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அழைப்பில் வந்த இந்தியப்படையினர் கொழும்பில் கேந்திரமுக்கியத்துவம் மிகுந்த இடங்களில் பாதுகாப்பிற்கென நிலைகொண்டிருந்தனா. "பூலோகத்தின் சொர்க்கம்" என வர்ணிக்கப்பட்ட இலங்கையே உள்நாட்டு ஆயுதக்கிளர்சியினால் ஆடிப்போய் இருந்தது. எங்குமே எவர் முகத்திலும் பயப்பிராந்திதான்.

குருநாகல் பிரதேசத்தின் பிரதானவீதிகள் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டு இருந்ததனாலும் வீதிகளின் இடையில் ஆங்காங்கே சோதனைச்சாவடிகளில் ஏற்ப்பட்ட காலதாமதத்தினாலும் காலையில் யாழ்பாணத்தில் இருந்து புறப்பட்ட லொறி கொழும்பை வந்தடையவே மாலை 6 மணியாகிவிட்டது. அந்த லொறி 4 ம் குறுக்குத்தெரு என வர்ணிக்கப்பட்ட கொழும்பின் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகமையத்திலிருந்த கடைகளிலிலிருந்தும் பண்டக சாலைகளிலிருந்தும் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதானமான விற்ப்பனை யாளர்களிற்கும் பொருட்களை பரிமாற்றம் செய்யும் "சலாம்" நிறுவனத்திற்கு சொந்தமானது.

மாலை ஆறுமணிக்கு பிறப்பிக்கப்படும் ஊரடங்குச்சட்டம் அமுலாகுவதற்கு சிலநிமிடங்களிற்கு முன்பாகவே அந்த லொறி நாலாம் குறுக்குத்தெருவை அடைந்தது. லொறியினை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை யை சேர்ந்த பாலசிங்கம் என்ற சாரதியே ஓட்டி வந்திருந்தார். நேரம் ஆறுமணியை நெருங்கி இருந்ததால் கடையின் கதவுகளும் பொருட்களை இறக்கவேண்டிய பண்டகசாலையின் கதவுகளும் மூடப்பட்டிருந்த நிலையில் லொறி அந்த குறிப்பிட்ட கடையின் முன்வந்து நின்றது. லொறியில் வந்த உதவியாளர் இறங்கிச்சென்று பூட்டப்பட்ட பண்டகசாலையின் கதவுகளை அவசரமாக தட்டிக்கெண்டிருந்தார்.

இன்றைய காலம்போல் யாழ்ப்பாணத்தில் இருந்து லொறி பறப்பட்டவுடன் தொலைபேசியில் அழைத்து லொறி புறப்பட்டுவிட்டது அங்குவரும் காத்திருங்கள் என தகவல் கூறப்படும் காலம் அன்றிருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் லொறி கொழும்பு போய் சேர்தலே தகவல் தொடர்பாக இருந்தகாலம். அதாவது அந்த லொறியே தகவல் ஊடகமாகவும் பயன்பட்டது எனலாம்.

பூட்டப்பட்ட கடையின்முன் லொறியினை நிறுத்திய சாரதி அடுத்து என்ன செய்வது? ஏன திகைத்து நிற்கவும் எங்கிருந்தோ வந்த இராணுவ ஜீப்பொன்று பின்னால் வந்து நின்றது. அதிலிருந்து துப்பாக்கியுடன் இறங்கிய இராணுவவீரர்கள் லொறியினை நோக்கி ஓடிவந்தனர். நாட்டில் ஏற்ப்பட்டிருந்த குழப்பநிலையினால் அக்காலத்தில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டு இராணுவத்திடம் நாட்டின் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டு இருந்தது. இதனையே அக்காலத்தில் ஆமிச்சட்டம் என சாதாரணமக்கள் அழைத்தனர்.

இக்காலத்தில் சந்தேகத்திற்கிடமான பலஇளவயதினர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போயிருந்தனர். இதனை அறிந்திருந்த சாரதி பாலசிங்கம் என்ன நினைத்தாரோ?.........லொறியினை இயக்கி ஓடஆரம்பித்தார். நாலாம் குறுக்குத்தெருவில் இருந்து புறப்பட்ட லொறி போக்கிடம் எதுவென்று தெரியாத நிலையில் ஓடஆரம்பித்தது. இராணுவஜீப்பும் பின்னால் துரத்தத் தொடங்கியது. ஊரடங்குச்சட்டம் அமுலாகும் நிலையில் பாதுகாப்புப் பணியில் வீதியில் நின்ற இராணுவம் தவிர வேறெருவருமின்றி வெறிச்சோடிய வீதியில் லொறியும் அதன் பின்னால் ஜீப்பும் காற்றைக்கிழித்தபடி ஓடின இல்லை பறந்தன. லொறிச்சாரதியான இளைஞன் பாலசிங்கத்திற்கு அது மரணஓட்டம்.

கொழும்புவீதியில் யாழ்ப்பாணசாரதியின் தப்பித்தலுக்கான ஓட்டம். தொலைத்தொடர்பு சாதனங்கள் பரவலாக இல்லாமையினால் வீதியில் நின்ற இராணுவத்தினர்கு எதுவும் புரியவில்லை!. எனினும் விரைவாக செல்லும் லொறியின் பின்னால் தொடர்ந்து செல்லும் தமது சகாக்களின் ஜீப்பினை தொடாந்து வீதியில் ஆங்காங்கு நின்ற வேறு ஜீப்புகளிலும் இராணுவத்தினர் தொடரஆரம்பித்தனர்.

இந்நிலையில் யாழ்பாணத்தில் இருந்து வந்த லொறியொன்று தலைதெறிக்க வேகமாக ஓடவும் அதனை விரட்டியவாறு செல்லும் இராணுவ ஜீப்பினைக் கணடதும் புறக்கோட்டை வீதியில் சென்ற காரொன்று இராணுவ ஜீப்பினைத் தொடர்ந்து சென்றது. ஒன்று இரண்டு மூன்று என இராணுவஜீப்புகளின் தொகை கூடிச்செல்வதைக் கண்டதும் சுயநினைவிற்கு வந்த பாலசிங்கம் தனது நிலையைப்புரிந்து கொண்டார்.

ஓடுவதை தவிர வேறு வழியில்லை! ஆனால் எங்கு ஓடுவது?......லொறியினை நிறுத்தினால் இராணுவத்தினரின் தாக்குதலிற்கு ஆளாகலாம் அல்லது சுடப்படலாம் வேறு வழியின்றி ஓடியலொறி மகரகம வீதியில் விரையம்போது தான் அச்சம்பவம் நிகழ்ந்தது. வேகத்துடன் லொறியினை முந்திச்செல்ல முயன்ற இராணுவஜீப்பொன்று லொறியினை விலத்திச்செல்ல முடியாமல் லொறியின் வலது பக்கவாட்டாக மோதி அருகிலிருந்த மதகொன்றில் கவிழ்ந்து வீழ்ந்தது.

கணநேர உணர்ச்சி மேலீட்டால் ஆரம்பித்த சம்பவம் மேலும் விபரீதமாகியது. தப்பித்துக்கொள்ள வழியின்றி தொடர்ந்து வேகமாக லொறியினை ஓட்டிய பாலசிங்கம் விபத்து நடந்த மதகிற்கு சில நூறுயார் தூரத்தில் இருந்த மகரகம பொலிஸ் நிலையத்தினை கணடதும் இன்னும் வேகமாகச் சென்று பொலிஸ்நிலைய வாசலிலே லொறியை நிறுத்திவிட்டு பொலிஸ்நிலையத்திற்குள் ஓடிச்சென்று சரணடைந்தார்.

ஊரடங்கு நேரத்தில் வேகமாக வந்தலொறி பொலிஸ்நிலைய வாசலில் நிற்கவும் திடீரென்று குதித்தோடிவரும் சாரதி பாலசிங்கத்தை பார்த்த அதிர்ச்சியில் உறைந்த பொலிஸார் அதிலிருந்து மீளுமுன்னரே பாலசிங்கம் பொலிஸ்நிலையத்தினில் புகுந்துவிட்டார். துரத்திவந்த இராணுவத்தினர் மட்டுமல்ல பொலிஸ்நிலைய காவலில் நின்ற பொலிஸார் கூட இவரைநோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்க்கொள்ளவில்லை. இதற்கு லொறியில் இருந்த தமிழ்எழுத்துக்களே காரணமாகும். அக்காலத்தில் அப்படியொரு நிலமை தமிழன் என்றால் அவன் ஜே.வி.பி ஆக இருக்க மாட்டான் என அரசபடைகளிற்கு ஏற்பட்டிருந்த முழுமையான நம்பிக்கையே இதற்கு காரணமாகும்.

1970…1971….காலப்பகுதியில் எந்தத்தமிழ் இளைஞரையும் ஜே.வி.பி யினர் தம்முடன் இணைத்துக் கொண்டதில்லை. காரணம் சீன மற்றும் வடகொரியாவின் கம்யூனிஸ போதனையின் அடிப்படையில் நிறுவப்பட்ட அன்றைய ஜே.வி.பி யினர் முதலாளித்துவ வழியில் சென்ற இந்தியாவை முற்றுமுழுதாக வெறுத்தனர். இந்தியர் என்றால் அவாகளிடம் ஏற்பட்டிருந்த மிதமிஞ்சிய வெறுப்பின் காரணமாகவே இந்திய தோட்டத்தொழிலாளரை தேயிலைச்செடிகளிற்கு உரமாக்குவோம் என வெறி கொண்ட வார்த்தைகளை 1969…1970…ஆம் ஆண்டுகளில் தமது பொதுக்கூட்டங்களிலும் கலந்துரையாடல்களிலும் கூறிவந்தனர்.

இதற்கு காரணம் சாதாரண சிங்களமக்களிற்கு தெரிந்ததெல்லாம் இந்தியர் என்றால் இந்திய வம்சாவழியில் வந்த மலையகத்தமிழ் தோட்டத்தொழிலாளரும் கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் வாழ்ந்த மலையகத்தமிழ் மக்களுமேயாகும். இதனைவிட அவர்கள் அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு கொழும்புநகரின் பலபகுதிகளிலும் அமைக்கப்படும் தென்னிந்தியதமிழ் நடிகர்களான எம்.ஜி.ஆர், சிவாஜி போன்றவர்களின் பிரமாண்டமான கட்அவுட் களுமே.

இவைபோன்ற காரணிகளால் இந்தியர் என்றால் தமிழர் எனற உணாவே சாதாரண சிங்களமக்களிடம் மேலோங்கி இருந்தது. அன்று அவர்களிற்கு மட்டுமல்ல உலகில் எவரிற்குமே இலங்கையின் வடகிழக்கு பிரதேசங்களில் ஈழத்தமிழர் எனப்படும் இனமொன்று தமக்கென தனியான கலாச்சாரம். பண்பாடு என்னும் அடையாளங்களைக் கொண்டு பாரம்பரியமாக வாழ்ந்து வருவது தெரியவில்லை.

இன்றும்கூட ஏழுகோடிக்கும் அதிகமான தமிழ்நாட்டு மக்களால் உலகநாடுகளில் தம்மை தமிழர் என அடையாளாப்படுத்த முடியாமலிருக்கும் போது ஏறக்குறைய 25 - 30 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட ஈழத்தமிழர் உலகப்பரப்பில் தம்மைத் "தமிழர்" என அடையாளப்படுத்தியுள்ளமையே இதற்கு சான்றாகும், என்பதனை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

பொலிஸ் நிலையத்தினில் ஓடிச்சென்று அடைக்கலம் புகுந்த சாரதியான இளைஞன் பாலசிங்கத்தை என்ன செய்வது எனத் தெரியாது பொலிஸார் திகைத்து நின்றனர். காரணம் மொழி…! பாலசிங்கத்திற்கோ சிங்களம் ஆங்கிலம் போன்ற மொழிகளில் போதிய பரிச்சயமில்லை. பொலிஸ்நிலையத்தில் இருந்த பொலிசாருக்கோ அல்லது துரத்தி வந்த இராணுவத்தினருக்கோ தமிழ் தெரியாத நிலமை. இந்நிலமை சிலநிமிட நேரமே நீடித்தது.

பொலிஸ் நிலைய வாசலில் வந்துநின்ற காரில் இருந்து இறங்கிவந்த இளம் சட்டத்தரணியே இதற்கு காரணமானார். வாசலில் நின்ற பொலிஸாரிடமும் இராணுவத்தினருடனும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சகஜமாக உரையாடியபடியே உள்ளே வந்த அவர் சாரதி பாலசிங்கத்துடன் தமிழில் உரையாடி நடந்ததைப் புரிந்துகொண்டார். பின்னர் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியிடம் சாரதி இராணுவத்தைக் கண்டு பயத்தினாலேயே ஓடினார் எனப் புரியவைத்ததுடன் ஜீப் மதகினில் புரண்டது எதிர்பாராத விபத்து என்பதை சாதுரியமாக புரியவைத்தார். அத்துடன் நட்புரீதியாக பொலிசாரிடமும் இராணுவத்திடமும் கதைத்து எவ்விதபிரச்சினையுமின்றி சாரதி பாலசிங்கத்தை விடுவித்ததுடன் தனது காரிலேயே கொழும்பிற்கு அழைத்தும் வந்தார். அதுமட்டுமன்றி மகரகமையில் தரித்துநின்ற சலாம் நிறுவனத்தின் அந்த லொறியை அடுத்தநாள் கொழும்பிற்கு கொண்டுவரவும் ஆவனசெய்தார்.

அவசரகாலம் அறிவிக்கப்பட்ட நிலையில் ஊரடங்குச்சட்டம் அமுலான வேளையிலும் துரத்தப்படுவது தமிழன் என அடையாளங் கண்டவுடன் துரத்திய இராணுவஜீப்பினை பின்தொடர்ந்து தமிழ்ச்சாரதியான பாலசிங்கத்தை காப்பாற்றியவர் “செல்வக்குமார் விவேகானந்தன்” என்ற இயற்பெயரைக் கொண்ட இளம் தமிழ்ச்சட்டத்தரணி வேறுயாருமல்ல. தனக்கு எதுவும் அபாயம் நேரலாம் எனத்தெரிந்தும் துரத்தப்படுவது தமிழனின் லொறி எனக்கண்டவுடன் சாதுரியமாகவும் வேகமாகவும் செயற்பட்டு சாரதியையம் லொறியையம் மீட்டெடுத்த இனப்பற்றாளர் வேறு யாருமல்ல ஈழத்தமிழரின் பெருமையை உலகறியச்செய்த சாதனைவீரன் “ஆழிக்குமரன் ஆனந்தன்” ஆவார்.

தாய்மொழியான தமிழ்மொழி மீது அவர் கொண்டிருந்த தீவிரமான பற்றும் எவ்விடத்திலும் எத்தகையவர்கள் முன்னிலையிலும் “நான் வல்வெட்டித்துறையான்” எனக்கூறும் சமூகப்பற்றும் எவ்வகையிலும் ஒப்பிடமுடியாதவை.

1971இல் “சேகுவரா” கிளர்ச்சிக்காலத்தில் ஆழிக்குமரன் ஆனந்தனின் தமிழ் உணர்வினால் காப்பாற்றப்பட்டவர் கொழும்புத்துறையை சேர்ந்த பாலசிங்கம் என்ற சாரதியாவார். இவர் பின்பு பருத்தித்துறை கடற்கரை வீதியில் திருமணம் செய்து குடும்பஸ்தராக வாழ்ந்திருந்தார்.

இக்காலகட்டத்தில் வல்வெட்டித்துறையின் “குமரகுரு ஐஸ் வாடி”யில் லொறிச்சாரதியாக பணியாற்றினார். பின்பு வல்வெட்டித்துறை கொழும்பு பஸ்சேவையான “கிருஸ்ணா” போக்குவரத்து சேவையிலும் பஸ்சாரதியாக கடமையாற்றியதுடன் வல்வெட்டித்துறை இளைஞர்கள் பலருக்கு எண்ணைத்தாங்கி கப்பல்களின் பரிச்சியத்தை ஏற்படுத்திய Petro Star 14 மற்றும் Petro star 19 இலக்க கப்பல்களிலும் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

30.6.1981 இல் சென்னை அண்ணா நீச்சல் குளத்தில் 80 மணத்தியாலங்கள் “தவளை” போல் இடைவிடாது நீந்தும் உலகசாதனையை நிறைவேற்றியிருந்தார். தொடாந்த சிலநாட்களிலேயே எல்லோரும் ஆச்சரியப்படும்படியாக “மெரீனா” கடற்கரைக்கு எதிரிலுள்ள காமராஜர் சாலை. அண்ணா சாலை. என்பவற்றின் ஊடாக சுற்றிவரும் பாதையில் “தொடர் நடை” சாதனையை ஆரம்பித்தார். இவருடன் இருந்தவர்களுக்கு மட்டுமல்ல தமிழகமக்களிற்கும் தமிழகபத்திரிகைகளிற்கும் பேராச்சரியம் இப்படி ஒருமனிதனா…….எப்படி முடியும் இவரால்……!

“என்னால் எதுவும் முடியும்”என்பதையே தனது தாரகமந்திரமாகக் கொண்டு ஏற்கெனவே நீணட பல உலகசாதனைகளை நிறைவேற்றிய ஆனந்தனோ தொடர்ந்து நடந்து கொணடிருந்தார். “வெற்றியில் கிடைப்பது சந்தோசம். முயற்சியில் கிடைப்பது திருப்தி” என்னும் வல்வெட்டித்துறை மக்களின் போராட்ட வாழ்விற்கிணங்க தனது வாழ்கையை வாழ்ந்து காட்டியவர் ஆழிக்குமரன் ஆனந்தன். இவரை உற்சாக மூட்டியவாறு பலரும் இவருடன் நடந்து கொண்டிருந்தார்கள்.

இடைவிடாது நீருக்குள்ளேயே இருந்ததனால் இழந்துபோன சக்தியை உடல் மீண்டும்பெற்று சாதாரணநிலைக்கு வராமை, சாதாரணமனிதர் போலல்லாது வலதுகாலைவிட சற்றுநீளம் குறைந்திருந்த இடதுகாலால் சிறிது கெந்தியபடி நடப்பதால் இடுப்புப்பகுதியில் தொடரும்வலி, என பலஉபாதைகளைத் தாங்கியபடி 159 மணித்தியாலங்கள் அவரது சாதனைப்பயணம் தொடர்ந்தது. இறுதியில் நீரில் ஊறிய அவரது கால்கள் இடைவிடாத நடையை தாங்கமுடியாது வெடித்து புண்ணாகி நடக்கமுடியாமையினால் அவரது சாதனைப்பயணம் தடைப்பட்டது.

இவ்வாறான சாதனைப்பயணத்தின் போது தமிழகத்தில் அன்றிருந்த அதிமுக. திமுக, திக. மற்றும் கம்யூனிஸ் கட்சி என்பனவும் தமது பேதங்களை மறந்து ஓரேமுகமாக இவருக்கு தமது ஆதரவை வழங்கி இருந்தன. இதேபோன்று தமிழகத்தின் தினசரி மற்றும் வாரப்பத்திரிகைகளும் முன்பக்கத்தில் இவரையும் இவரது சாதனை முயற்சியையும் செய்திஆக்கி இருந்தன. இவர்களில் பலரும் ஆனந்தனுடன் இணைந்து தினமும் நடப்பர். இச்சாதனைப்பயணத்தின் போது எம்மவர்களான கலாபதி, ஆயக்கிளி, தேவரண்ணா எனப்பலரும் ஆனந்தனுடன் எப்பொழுதுமே உடனிருந்தனர்.

திராவிடர் கழக கட்சியை சேர்ந்தவரும் இலங்கைத்தமிழரின் நண்பனுமான “மேகநாதன்” என்பவர் தொடராக ஆனந்தனின் தொடர் நீச்சல் சாதனையின் போதும் நீண்டநடைச்சாதனையின் போதும் சமூகமளித்திருந்தவர் மட்டுமல்ல. தினமும் ஆனந்தனுடன் கூடவே பலமணித்தியாலங்கள் நடப்பவர். அவ்வாறு நடக்கும் வேளையில் தொடரும் தனது ஆச்சரியத்தை தாங்கமுடியாமல் ஆனந்தனை இவர் கேட்டார்?

எதற்காக உடலை வருத்தி இப்படி ஒருசாதனையைப் புரிகின்றீர்கள்?

சில மணித்தியாலங்களல்ல சில நாட்களாக தொடர்ந்து நடந்து கொண்டிருந்த நிலையிலும் திரும்பி மேகநாதனைப் பார்த்து பதிலைக் கூறிய ஆனந்தன் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தார். சில கணங்கள் அதிர்ச்சியில் உறைந்த மேகநாதன் ஆனந்தனை தொடர்ந்து நடந்தார். அவ்வேளையில் ஆழிக்குமரன் ஆனந்தன் கூறியபதில்............

“ நான் வல்வெட்டித்துறையில் பிறந்தவன் ”